# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 306 | 4 Pages | 8.4.2024 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 306 | 4 பக்கங்கள் | 8.4.2024 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## நீட் தேர்வை ஒழித்துக்கட்டும் நாள் வெகுதொலைவில் இல்லை: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் காட்டம்



சென்னை, ஜூன் 8

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறியிருப்பதாவது:

சமீபத்தில் வெளியாகிய நீட் தேர்வுமுடிவுகள்தொடர்பாகவெளிவரும் செய்திகள் அத்தேர்வுக்கு எதிரான நமது கொள்கை நிலைப்பாடு நியாயமானது என்பதை உறுதிப்படுத்துகின்றன. வினாத்தாள் கசிவுகள், குறிப்பிட்ட மையங்களில் இருந்து மொத்தமாக அதிக மதிப்பெண் பெறும் மாணவர்கள், கருணை மதிப்பெண்கள் என்ற போர்வையில்நடைமுறைக்குச்சாத்தியமற்ற அளவில் மதிப்பெண்களை அள்ளி வழங்குவது போன்ற குழப்பங்கள் தற்போதைய ஒன்றிய அரசின் அதிகாரக்குவிப்பின் குறைபாடுகளை வெட்டவெளிச்சமாக்குகின்றன.

இவை, தொழிற்படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை நடைமுறையைத் தீர்மானிப்பதில் மாநில அரசுகள் மற்றும் பள்ளிக் கல்வி முறை மீண்டும் முதன்மை பெற வேண்டியதன்அவசியத்தைஉணர்த்துகின்றன.

நீட் மற்றும் பிற தேசிய நுழைவுத் தேர்வுகள் ஏழை மாணவர்களுக்கு எதிரானவை. அவை கூட்டாட்சியியலை சிறுமைப்படுத்துபவை. சமூகநீதிக்கு எதிரானவை. தேவையுள்ள இடங்களில் மருத்துவர்களின் இருப்பை பாதிப்பவை. நீட் எனும் பிணியை அழித்தொழிக்கக் கரம் கோர்ப்போம்! நீட் தேர்வை ஒழித்துக்கட்டும் நாள் வெகுதொலைவில் இல்லை.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தயாநிதி மாறன் தொடர்ந்த அவதூறு வழக்கில் வினோஜ் பி.செல்வம் கோர்ட்டில் ஆஜர்



சென்னை, ஜூன் 8

மத்திய சென்னைநாடாளுமன்ற தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் தயாநிதி மாறன். அதே தொகுதியில் பா.ஜனதா சார்பில் அக்கட்சியின் மாநில செயலாளர் வினோஜ் பி.செல்வம், தயாநிதி மாறனை எதிர்த்து போட்டியிட்டார்.

தேர்தல் பிரசாரத்தின்போது, 'நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் 75 சதவீதத்தை தயாநிதி மாறன் செலவு செய்யவில்லை' என வினோஜ் பி.செல்வம் குற்றம் சாட்டினார். அதற்கு தயாநிதி மாறன் எதிர்ப்பு தெரிவித்தார். உண்மையிலேயே 95 சதவீத நிதியை பயன்படுத்தி உள்ளதாகவும், தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் இவ்வாறு பேசி உள்ளதாகவும் கூறி வினோஜ் பி.செல்வம் மீது சென்னை எழும்பூர் கோர்ட்டில் தயாநிதி மாறன் அவதூறு வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கில் வினோஜ் பி. செல்வம் நேரில் ஆஜராக எழும்பூர் கோர்ட்டு உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையில் இன்று அந்த வழக்கு நீதிபதி தர்ம பிரபு முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது வினோஜ் பி.செல்வம் நேரில்ஆஜரானார்.விசாரணைக்கு பின்பு வழக்கை, ஜூலை 2ந் தேதிக்கு நீதிபதி தள்ளி வைத்தார்.

## 'பெரியார் வாழ்க' என்று பா.ஜ.க. சொல்லட்டும் அண்ணாமலைக்கு கனிமொழி பதிலடி





சென்னை, ஜூன் 8

நாடாளுமன்ற மக்களவை தேர்தலில் தூத்துக்குடி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தி.மு.க. வேட்பாளர் கனிமொழி செய்தியாளர்களை சந்தித்து பேசியபோது,தி.மு.க.குறித்துபா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை விமர்சித்தது தொடர்பாக செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த கனிமொழி, "அண்ணாமலை அடிக்கடி கனிமொழிக்கு என்ன தகுதி இருக்கிறது என்று கேட்பார். இரண்டாவது முறையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதிநிதி என்ற தகுதியுடன் நான் அவருக்கு பதில் சொல்கிறேன். இந்த தகுதி கூட இல்லாத ஒருவர் பா.ஜ.க.வின் மாநில தலைவராக நீடிப்பது அந்த கட்சிக்கு நல்லதல்ல" என்று தெரிவித்தார்.

கனிமொழியின் கருத்து தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அண்ணாமலை, "என் அப்பா கருணாநிதியாக இருந்திருந்தால் நானும் ஜெயித்திருப்பேன். ஆனால் என் அப்பா குப்புசாமி. அவர் எம்.எல்.ஏ. அல்லது எம்.பி. ஆக இருந்தது இல்லை. அவர் தோட்டத்தில் ஆடு, மாடுகளை மேய்த்து விவசாயம் செய்கிறார். நான் அவருடைய மகன். எனவே நான் ஜெயிப்பதற்கு கொஞ்சம் நேரம் ஆகும். மாநில தலைவர் பொறுப்பில் இருந்து நான் விலக வேண்டும் என்று கனிமொழி சொல்லியிருக்கிறார். ஒருவேளை அவர் பா.ஜ.க.விற்கு வருவதாக இருந்தால் நான் பரிசீலனை செய்கிறேன்" என்று தெரிவித்தார்.

இந்நிலையில் அண்ணாமலையின் பேச்சுக்கு பதிலளித்துள்ள கனிமொழி, "பா.ஜ.க. முதலில் 'பெரியார் வாழ்க' என்று சொல்ல ஆரம்பிக்கட்டும். அவர்களின் கட்சியை வளர்ப்பதற்காக நான் அங்கே போக வேண்டிய அவசியம் இல்லை. தி.மு.க.தான் எனக்கு தெரிந்த, நான் நம்பிக்கை வைத்திருக்கக் கூடிய இயக்கம். என்னை இங்கிருந்து யாராலும், எதற்காகவும் அசைக்க முடியாது" என்று தெரிவித்தார்.

## திமுக கூட்டணி வெற்றி: சத்தியமங்கலம் கிராமத்தில் கொண்டாட்டம்



செஞ்சி, ஜூன் 8

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் சத்தியமங்கலம் கிராமத்தில் தமிழகம், புதுச்சேரியில் மொத்தமுள்ள 40 மக்களவைத் தொகுதிகளிலும் திமுக கூட்டணி வெற்றி பெற்றதையடுத்து, சத்தியமங்கலம் கிராமத்தில் திமுக கட்சியினர் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினா்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் சத்தியமங்கலம் பஸ் நிறுத்தம் அருகில் சத்தியமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.ஆர்ரவிசங்கர், செஞ்சி ஒன்றியகவுன்சிலர்டெலிட் ஆரோக்கியராஜ் கிளை கழகம் மகளிர் அணசார்பிலும் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினா். நிகழ்ச்சியில் கிளை செயலாளர் சுப்பிரமணி,நிக்கோலாஸ், திருவேங்கடம், சாதிக் பாஷா, சங்கர், மற்றும் மகளிர் ,சங்கீதா, வள்ளி, அந்தோணியம்மாள், அரண்ஷா, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

## கனடா ஜனநாயகத்திற்கு 2வது பெரிய அச்சுறுத்தல் இந்தியா: ஜஸ்டின் ட்ரூடோ



ஒட்டாவா, ஜூன் 8

கனடாவில் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதில் இந்திய முகவர்களுக்குத் தொடர்பு இருப்பதாக கடந்த ஆண்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அந்நாட்டின் பாராளுமன்றத்தில் பகிரங்கமாக தெரிவித்தார். இதையடுத்து கனடாவில் உள்ள இந்திய தூதரக அதிகாரியை வெளியேறுமாறு அந்த நாடு உத்தரவிட்டது.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக கனடா தூதரை இந்தியாவில் இருந்து வெளியேறச் சொல்லியது. கனடாவை சேர்ந்தவர்களுக்கு விசா கொடுக்கும் நடைமுறையையும் நிறுத்தி வைத்தது.

காலிஸ்தானி பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை வழக்கில் இந்தியா மீது குற்றம் சுமத்தியபோது ஆதாரமற்றவை என இந்திய அரசு மறுப்பு தெரிவித்திருந்தது.

இந்நிலையில், கனடா நாட்டின் ஜனநாயகத்துக்கு இந்தியா இரண்டாவது பெரிய வெளிநாட்டு அச்சுறுத்தலாக உள்ளது. அச்சுறுத்தல் தருவதில் சீனா முதலிடத்தில் இருக்கிறது. அச்சுறுத்தல் தருவதில் 2வது இடத்தில் இருந்த ரஷியா 3வது இடத்திற்குச் சென்றுள்ளது. கனடாவின் அரசியல் கட்சி தலைவர்கள் வெளிநாட்டு சக்திகளால் செல்வாக்கு பெற்றிருக்கலாம். வெளிநாட்டு தூதர்களுடன் ரகசிய தகவல்களைப் பகிர்ந்திருக்கலாம் என அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார் என அந்நாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

## காசா பள்ளி மீது இஸ்ரேல் வெடிகுண்டு தாக்குதல்: 37 பேர் பலி



ஜெருசலேம், ஜூன் 8

இஸ்ரேலுக்கும், ஹமாஸ் பயங்கரவாதிகளுக்கும் இடையே பல மாதமாக போர் நடந்து வருகிறது. ரபாவிலும் இருதரப்புக்கும் இடையே மோதல் நடக்கிறது.


ஹமாஸ் பயங்கரவாதிகளை முற்றிலும் அழிக்கும் வரை போர் தொடரும் என இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு தெரிவித்தார்.

இந்நிலையில், மத்திய காசாவில் உள்ள நுசி ராட்டில் பள்ளிக்கூடத்தில் ஹமாஸ் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாகக் கூறி இஸ்ரேல் ராணுவம் வான்வழி தாக்குதல் நடத்தியது.

இந்த வெடிகுண்டு தாக்குதலில் 5 குழந்தைகள் உள்பட 37 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலை இஸ்ரேல் தரப்பும் உறுதிசெய்துள்ளது.

இதுதொடர்பாக ஹமாஸ் செய்தித்தொடர்பாளர் கூறுகையில், அப்பாவி மக்கள்மீது தாக்குதல் நடத்திவிட்டு அதை சமாளிக்கப் பொய்க் கதைகளை இஸ்ரேல் சொல்லி வருகிறது என தெரிவித்தார்.

## செக் குடியரசு நாட்டில் 2 ரெயில்கள் மோதல்4 பேர் பலி



பர்டுபிஸ்: ஜூன் 8

செக் குடியரசு நாட்டின் தலைநகர் பிராக்கிலியில் இருந்து 100 கிலோ மீட்டர் தூரத்தில் பர்டுபிஸ் ரெயில் நிலையம் உள்ளது. இந்த ரெயில் நிலையம் அருகே சரக்கு ரெயில் ஒன்று திடீரென தடம் புரண்டு கவிழ்ந்தது.

அப்போது அந்த வழியாக வந்த பயணிகள் ரெயில் எதிர்பாராத விதமாக சரக்கு ரெயில் மீது பயங்கரமாக மோதியது. இந்த விபத்தில் 4 பயணிகள் பரிதாபமாக இறந்தனர். 26 பேர் படுகாயம் அடைந்தனர். விபத்து பற்றி அறிந்ததும் மீட்பு படையினர் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

படுகாயத்துடன் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். விபத்தில் சிக்கிய ரெயில் தனியார் நிறுவனத்தால் இயக்கப்பட்டதாகும்.

இந்த ரெயில் ஸ்லோவாக்கியாவின் எல்லைக்கு அருகில் உள்ள மேற்கு உக்ரைன் நகரான சோப் நோக்கி சென்று கொண்டிருந்தது.இந்த ரெயிலில் 300க்கும் மேற்பட்ட பயணிகள் பயணம் செய்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் வெளிநாட்டினர்.

விபத்து நடந்த இடத்தில் மீட்பு பணிகள் தொடர்ந்து நடந்து வருகிறது. இது தொடர்பாக செக்குடியரசு நாட்டின் பிரதமர் பீட்டர் பியாலா வெளியிட்டுள்ள அறிக்கையில் 2 ரெயில்கள் மோதிக்கொண்டது மிகவும் துரதிஷ்ட வசமானது. விபத்தில் உயிர் இழந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

# முதலில் தனது பதவியை காப்பாற்றி கொள்ளட்டும்: அண்ணாமலைக்கு அ.தி.மு.க. பதிலடி



சென்னை, ஜூன் 8

தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை இன்று மதியம் டெல்லி புறப்பட்டார். அப்போது அவர் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில், பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. இணைந்து போட்டியிருந்தால் 35 தொகுதிகளை பிடித்திருப்போம் என எஸ்.பி. வேலுமணி சொல்கிறார். அ.தி.மு.க. கட்சியில் எடப்பாடிவேலுமணி இடையே உட்கட்சி பூசல் இருப்பது போல் தெரிகிறது என கூறினார்.

இந்நிலையில், அண்ணாமலையின் பேட்டிக்கு அ.தி.மு.க. தகவல் தொழில்நுட்பப் பிரிவு பதிலடி கொடுத்துள்ளது. இது தொடர்பாக அ.தி.மு.க. ஐ.டி. விங் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

அ.தி.மு.க. குறித்தோ, எடப்பாடி பழனிசாமி மற்றும் எஸ்.பி.வேலுமணி குறித்தோ பேச அண்ணாமலைக்கு எந்த அருகதையும்இல்லை.தன்தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கும் கத்திகளைப் பார்க்காமல் அ.தி.மு.க. பற்றி மூக்கு வியர்க்க பேசும் அண்ணாமலை, முதலில் தனது பதவியையும் இருப்பையும் காப்பற்றிக் கொள்ளட்டும்.

ஆடு, ஓநாய், நரி என எது வந்தாலும், எப்படி கொக்கரித்தாலும் அ.தி.மு.க.வை அசைத்துக்கூட பார்க்க முடியாது என தெரிவித்துள்ளது.

# மு.க.ஸ்டாலின் 40 தொகுதிகளையும் வென்று காட்டி 'இது பெரியார் மண்' என்று நிரூபித்துவிட்டார் கி.வீரமணி பாராட்டு



சென்னை, ஜூன் 8

திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது:

வெளிவந்த தேர்தல் முடிவுகளின்படி, வரலாற்றில் மறக்க முடியாத, மறைக்க முடியாத, மறுக்க முடியாத, மகத்தான வெற்றியாக தமிழ்நாடுபுதுச்சேரி ஆகிய மாநிலங்களின் 40 தொகுதிகளிலும் வெற்றி வாகை சூட வைத்து, "இந்த நாற்பதுஇனியவை நாற்பது" என்பதை உணர்த்தி, பிரகடனப்படுத்தியதற்குக் காரணமான முதலமைச்சர்மு.க.ஸ்டாலினை பாராட்ட வார்த்தைகளே இல்லை!

அவரது கடும் உழைப்பும், திட்டமிட்ட மதியூக வியூகமும் தந்த வெற்றிக்கனிகள் இவை. கலைஞர் தம் நூற்றாண்டு நிறைவில் இந்த இனிய நாற்பதைக் கொண்டுமுதலமைச்சரும் கூட்டணியினரும் கட்டிய இந்த வெற்றி மாலையைக் கலைஞரின் தோளுக்குச் சூட்டிடும் அவரது முயற்சியின் மூலம், மீண்டும் "இது பெரியார் மண்தான்" என்பதையும், "திராவிடம் வெல்லும்; அதை வரலாறு என்றும் சொல்லும்" என்பதையும் நிரூபித்து விட்டார்,

அவரே அதன் வெற்றிக்கும் அடித்தளமிட்டார். அந்த வெற்றித் திருமகனாருக்குத் தாய்க் கழகத்தின் வாழ்த்துகள்!

காவிகளின் பொய்யுரை எடுபடவில்லை. காவிக் கறை வடஇந்தியாவில் கலைய, கரையத் தொடங்கி விட்டது.

காங்கிரசும், இளந்தலைவர் ராகுல் காந்தியின் இடையறாத பிரசாரச் சுனாமியும் இந்தியா, கூட்டணி கட்சிகளின் ஒருங்கிணைந்த பிரசாரமும் முகிலைக் கிழித்து எறிந்து புதிய விடியலுக்கு வித்திட்டிருக்கின்றன!

இதற்குக் காரணமான வாக்காளர்களுக்கு நன்றியுடன் கூடிய வாழ்த்துகள்!

சர்வாதிகார வெறிக்கு அணை போடப்பட்டுள்ளது; அந்த அணை முழுமையாவதற்கு முழுக் கவனமும்அரசியல்வியூகமும் தேவை! அதற்கும் தமிழ்நாடும் அதன் மதியூகியான நமது தி.மு.க. தலைவரும் கலங்கரை வெளிச்சமாக என்றும் இருப்பார் என்பது உறுதி!

ஜனநாயகத்தின் அரசியல் சட்டத்தின் தலை தப்பியுள்ளது.

இவ்வாறு கி.வீரமணி கூறி உள்ளார்.

# சவுக்கு சங்கர் சிறையில் அடைக்கப்பட்ட ஒவ்வொரு மணி நேரத்துக்கும் ரூ.10 ஆயிரம் வழங்க தயாரா? அரசுக்கு ஐகோர்ட் கேள்வி



சென்னை, ஜூன் 8

பெண் போலீஸ் குறித்தும், போலீஸ் உயர் அதிகாரிகள் குறித்தும் அவதூறாக பேசிய யூடியூபர் சவுக்கு சங்கரை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க சென்னை போலீஸ் கமிஷனர் உத்தரவிட்டார்.

இந்தஉத்தரவைஎதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் சவுக்கு சங்கரின் தாயார் கமலா ஆட்கொணர்வு மனுவை தாக்கல் செய்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஜி.ஆர். சுவாமிநாதன், பி.பி. பாலாஜி ஆகியோர், மாறுபட்ட தீர்ப்புகளை வழங்கினர். நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், குண்டர்தடுப்புச் சட்டத்தின் கீழ் சவுக்கு சங்கரை சிறையில் அடைக்க போலீஸ் கமிஷனர் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்தார்.

ஆனால், நீதிபதி பி.பி.பாலாஜி, போலீஸ் கமிஷனர் உத்தரவை ரத்து செய்ய மறுத்து, பதில் அளிக்கும்படி நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார்.

இதையடுத்து, இந்த வழக்கு 3வது நீதிபதி விசாரணைக்கு பரிந்துரைக்கப்பட்டது. அதன்படி, இந்த வழக்கை விசாரிக்க நீதிபதி ஜி.ஜெயச்சந்திரன் நியமிக்கப்பட்டார். அவர் முன்பு கடந்த முறை இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யவில்லை.

இந்தநிலையில், இந்த வழக்கு நீதிபதி முன்பு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழக அரசுத்தரப்பில் கூடுதல் அட்வகேட் ஜெனரல் ஜெ.ரவீந்திரன் ஆஜராகி, ''இந்த வழக்கில் 4ந்தேதி விசாரணைக்கு வந்தபோது, ஒரு நீதிபதி பி.பி.பாலாஜி பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டார். அந்த தீர்ப்பை ஏற்று, இந்த வழக்கை டிவிசன் பெஞ்ச் விசாரணைக்கு மாற்ற வேண்டும் என்று போலீஸ் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது'' என்று வாதிட்டார்.

இதை ஏற்க மறுத்த நீதிபதி, ''குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்க பிறப்பிக்கப்பட்ட உத்தரவு தொடர்பான ஆவணங்களை நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் பார்வையிட்டுள்ளார்.

அது சட்டப்படி பிறப்பிக்கப்படவில்லை என தன் உத்தரவில் கூறியுள்ளார். எனவே, இந்த வழக்கில் இரு நீதிபதிகளின் உத்தரவில் எது சரி என்பதை முடிவு செய்ய என்னை (நீதிபதியை) பொறுப்பு தலைமை நீதிபதி நியமித்துள்ளார். பதில் மனுதாக்கல் செய்ய 15 நாட்கள் ஏற்கனவே நீதிபதிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

கடந்த முறை என்னிடம் விசாரணைக்கு வரும் போது, அவகாசம் வழங்கினேன். ஆனால், போலீசார் பதில் மனு தாக்கல் செய்யாமல், டிவிசன் பெஞ்ச் விசாரணைக்கு மாற்ற வேண்டும் என்று மனு தாக்கல் செய்கின்றனர்.

இப்போது இந்த வழக்கில் சவுக்கு சங்கரை குண்டர் சட்டத்தில் சிறையில் அடைத்தது தவறு என்று ஒருவேளை முடிவுக்கு வந்தால், சவுக்கு சங்கரை சிறையில் இதுவரை அடைத்ததற்காக ஒரு மணி நேரத்துக்கு ரூ.10 ஆயிரம் என்று அரசு வழங்கதயாராக உள்ளதா?

இதற்கு தயார் என்றால் பதில் மனு தாக்கல் செய்ய மேலும் அவகாசம் தருகிறேன்'' என்று கருத்து தெரிவித்தார்.

சவுக்கு சங்கர் தாய் தரப்பில் ஆஜரான மூத்த வக்கீல் ஜான் சத்தியன், இந்த வழக்கை மீண்டும் டிவிசன் பெஞ்சுக்கு அனுப்ப அவசியமில்லை. அது நீதித்துறை நேரத்தை வீணடிக்கும் செயல்'' என்றார்.

இதையடுத்து இந்த வழக்கில் 2.15 மணிக்குள் பதில்மனு தாக்கல் செய்ய உத்தரவிட்ட நீதிபதி, விசாரணையை தள்ளிவைத்தார்.

# அ.தி.மு.க. தோல்வி: அரிவாளால் காலை வெட்டிய தொண்டர்: தூத்துக்குடியில் பரபரப்பு

தூத்துக்குடி, ஜூன் 8


தூத்துக்குடி மாவட்டம் திரவியபுரத்தை சேர்ந்தவர் செல்வக்குமார் (வயது 75). 3 சக்கர சைக்கிள் ஓட்டும் தொழிலாளி. 1972ம் ஆண்டு முதல் அ.தி.மு.க.வில் தீவிர தொண்டராக இருந்து வருகிறார். இவர், நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் அ.தி.மு.க. 30 இடங்களில் வெற்றி பெறும் என்று அந்த பகுதியில் உள்ள டீக்கடையில் வைத்து பேசினார்.

அப்போது, அங்கிருந்த மற்றொருவர், அ.தி.மு.க.வுக்கு ஒரு இடம் கூட கிடைக்காது. தி.மு.க.தான் வெற்றி பெறும் என்று கூறினார். இதனால் அவர்களுக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டு உள்ளது. இதனை தொடர்ந்து அவர்கள் இருவரும் பந்தயம் கட்டினார்கள். அப்போது செல்வக்குமார், "அ.தி.மு.க. தோற்றுவிட்டால் எனது காலை வெட்டுகிறேன்" என்று கூறினார்.

இந்தநிலையில் நாடாளுமன்ற தேர்தலில் அ.தி.மு.க. ஒரு இடத்தில் கூட வெற்றி பெறாமல் தோற்றது.

இதனால் செல்வக்குமார் நேற்று முன்தினம் அரிவாளால் தனது வலது காலில் கரண்டைக்கு கீழே லேசாக வெட்டினார். இதில் காயமடைந்த அவருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. இச்சம்பவம் தூத்துக்குடியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# பள்ளிகள் திறப்பு எதிரொலி.. பஸ், ரெயில்களில் அலைமோதும் கூட்டம்




சென்னை, ஜூன் 8

தமிழகத்தில் கோடை விடுமுறைக்கு பின்னர் பள்ளிகள் வழக்கமாக ஜூன் முதல் வாரத்தில் திறக்கப்படும். இதற்கிடையே இந்த கல்வியாண்டில் (20242025) நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் கடந்த 4ந் தேதி அறிவிக்கப்பட்டதால், பள்ளிகள் 6ந்தேதி (அதாவது நேற்று) திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் கோடை வெயில் தாக்கம் காரணமாக 10ந்தேதிக்கு தள்ளிவைக்கப்பட்டது.

பொதுவாக கோடை விடுமுறையில் குழந்தைகளை அழைத்துக் கொண்டு தங்கள் சொந்த ஊர்கள் மற்றும் உறவினர் இல்லங்களுக்கு பெற்றோர் செல்வர். அந்த வகையில் சென்னையில் வசித்து வரும் மாணவமாணவிகள் கோடை விடுமுறையில் தமிழகத்தில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கும் கோடை விடுமுறையை கொண்டாட சென்றிருப்பார்கள். இவ்வாறு தங்கள் சொந்த ஊர்களுக்கு சென்றவர்கள் வருகிற 10ந் தேதி பள்ளிக்கு செல்வதற்காக சென்னை திரும்பி வருகின்றனர்.

இந்த நிலையில் வருகிற 9ந் தேதி தமிழகம் மற்றும் அண்டை மாநிலங்களில் இருந்து சென்னை திரும்புவதற்கு வசதியாக அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் சார்பில் 705 சிறப்பு பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் தேவைக்கு ஏற்ப அனைத்து இடங்களில் இருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அரசு பஸ்கள் மற்றும் தனியார் ஆம்னி பஸ்களில் பயணிகள் கூட்டம் நிரம்பி வருகிறது. ரெயில்களில் முன்பதிவில்லா பெட்டிகளில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. பஸ்களிலும் இதே நிலையே நீடிக்கிறது.

# அண்ணாமலைக்கு எதிராக கோஷம்: நடுரோட்டில் வெட்டப்பட்ட ஆடு சமூக வலைதளங்களில் வைரலானதால் பரபரப்பு



கிருஷ்ணகிரி, ஜூன் 8

நாடாளுமன்ற தேர்தலில் பதிவான ஓட்டுகள் கடந்த 4ந் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில் தமிழ்நாடு புதுச்சேரியில் தி.மு.க. கூட்டணி போட்டியிட்ட 40 தொகுதிகளிலும் அமோக வெற்றி பெற்றது. அ.தி.மு.க. கூட்டணி, பா.ஜனதா கூட்டணி, நாம் தமிழர் உள்ளிட்ட கட்சி வேட்பாளர்கள் யாரும் வெற்றி பெறவில்லை.

இந்த நிலையில், கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் அருகே பையூர் பகுதியில் தேசிய நெடுஞ்சாலையில் ஆடு ஒன்றின் கழுத்தில் தமிழக பா.ஜனதா கட்சி தலைவர் அண்ணாமலையின் படத்தை அணிவித்து சிலர் அழைத்து வந்தனர். தொடர்ந்து அந்த ஆட்டை நடுரோட்டில் அதன் தலையை வெட்டி சாகடித்தனர். அப்போது அண்ணாமலைக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர்.

இந்த வீடியோ கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள வாட்ஸ்அப் குழுக்களில் வைரல் ஆனது. இந்த வீடியோ காட்சிகளால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட பா.ஜனதா தலைவர் கே.எஸ்.ஜி.சிவப்பிரகாஷ் தலைமையில் நிர்வாகிகள் நேற்று மாலை கிருஷ்ணகிரி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்திற்கு வந்தனர். அவர்கள் கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு சங்குவை சந்தித்து ஒரு புகார் மனு கொடுத்தனர். அதில், "எங்களுக்கு வாட்ஸ் அப் மூலமாக வந்த தகவலை பார்த்து அதிர்ச்சி அடைந்தோம். அதில் சில சமூக விரோதிகள் ஆடு ஒன்றை நடுரோட்டில் வெட்டி அதன்ரத்தத்தை பா.ஜனதா கட்சியின் மாநில தலைவர் அண்ணாமலை புகைப்படத்தின் மீது தெளித்துள்ளனர். மேலும் 'அண்ணாமலை ஆடு, பலி ஆடு' என்று கோஷமிட்டு அதை வீடியோவாக எடுத்து சமூக வலைதளங்களில் அதை பரப்பி வன்மத்தையும் பிரிவினையையும் மக்களிடையே பயத்தை ஏற்படுத்தும் வகையில் செய்துள்ளனர். மேலும் அண்ணாமலைக்கு கொலை மிரட்டல் விடுக்கும் வகையிலும், பொது அமைதிக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையிலும் செயல்பட்ட நபர்கள் மீது வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த சம்பவத்தில் 10 பேர் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அந்த புகார் மனுவில் கூறப்பட்டுள்ளது.

# 14 ஆயிரம் வாக்குகள் பெற்ற சுயேச்சை வேட்பாளர்.. தீப்பெட்டி என நினைத்து பிஸ்கட் சின்னத்துக்கு ஓட்டுகள் விழுந்ததா..?




திருச்சி, ஜூன் 8

திருச்சி நாடாளுமன்ற தொகுதியில் வாக்கு எண்ணிக்கை முடிவுற்று முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இந்த தொகுதியில் ம.தி.மு.க. வேட்பாளர்துரை வைகோ சுமார் 3 லட்சத்து 13 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இவரை தொடர்ந்து அ.தி.மு.க. வேட்பாளர் கருப்பையா 2 லட்சத்து 29 ஆயிரத்து 119 வாக்குகளைபெற்று 2ம் இடத்தை பிடித்தார். திருச்சி நாடாளுமன்ற தொகுதியில் மொத்தம் 35 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இவர்களில் அ.ம.மு.க., நாம் தமிழர் கட்சி ஆகிய வேட்பாளர்களும் தலா ஒரு லட்சத்துக்கு மேல் வாக்குகளை பெற்று இருந்தனர். நாம் தமிழர் கட்சி 3ம் இடமும், அ.ம.மு.க. 4ம் இடமும் பிடித்தது. அதற்கு அடுத்து ஒரு சில கட்சிகள்உள்படசுயேச்சை வேட்பாளர்கள் அனைவரும் ஆயிரம், 2 ஆயிரம் என மிக குறைந்த அளவே வாக்குகளை பெற்று இருந்தனர். பத்மஸ்ரீ விருது பெற்ற கிராமாலயா தொண்டு நிறுவன இயக்குனர் தாமோதரன் 5,166 வாக்குகளை பெற்று இருந்தார்.

ஆனால் அனைத்து தரப்பினரையும் ஆச்சரியப்படுத்தும் வகையில் திருச்சி தொகுதியில் போட்டியிட்ட புதுக்கோட்டையை சேர்ந்த சுயேச்சைவேட்பாளர் செல்வராஜ் 14 ஆயிரத்து 796 வாக்குகளை பெற்றுள்ளார். முன்னதாக வாக்கு எண்ணிக்கையின்போதே சுயேச்சை வேட்பாளர் செல்வராஜ் அனைவரது கவனத்தையும் ஈர்த்து வந்தார். அதற்கு காரணம், ஒவ்வொரு சுற்றிலும் அவர் 700க்கும் அதிகமான வாக்குகளை பெற்றிருந்தார்.

இது அனைவருக்கும் வியப்பை ஏற்படுத்தியது. இவருக்கு எப்படி மக்கள் மத்தியில் இத்தனை செல்வாக்கு? என்று வாக்கு எண்ணும் மையத்தில் இருந்த முகவர்கள் குழம்பினர். ஏனெனில் துரை வைகோ பெயரை ஒத்த பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளர் துரை, அ.தி.மு.க. வேட்பாளர் கருப்பையா பெயரை கொண்ட இன்னொரு சுயேச்சை வேட்பாளரும் குறைந்த வாக்குகளை பெற்றிருந்தனர்.

34 வயதுடைய செல்வராஜ் தனியார் நிதி நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். இவர் தேர்தலில் போட்டியிட மனு தாக்கல் செய்தபிறகு, இவருக்கு தேர்தல் ஆணையம் பிஸ்கட் சின்னம் ஒதுக்கியுள்ளது. அதன்பிறகு இவர் தனக்கு வாக்கு கேட்டு மக்களிடம் எந்தவித பிரசாரமும் மேற்கொள்ளவில்லை என்று கூறப்படுகிறது. இத்தகைய சூழலில், செல்வராஜுக்கு 14 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் எப்படி கிடைத்தது? என்பதே எல்லோருடைய கேள்வியாக உள்ளது.

செல்வராஜ் போட்டியிட்ட பிஸ்கட் சின்னம் செவ்வக வடிவத்தில், ம.தி.மு.க. வேட்பாளர் துரை வைகோ போட்டியிட்ட தீப்பெட்டி சின்னத்தை போன்றே வாக்குப்பதிவு எந்திரத்தில் இருந்துள்ளது. இதனால் ஏற்பட்ட சின்ன (சின்னம்) குழப்பத்தில் வாக்காளர்கள் பலர் பிஸ்கட்சின்னத்துக்கு வாக்களித்து இருக்கக் கூடும் என அரசியல் கட்சியினர் தெரிவித்தனர்.

மேலும், செல்வராஜுக்கு தான் சார்ந்த புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி மட்டுமின்றி திருச்சி கிழக்கு தொகுதியில் 1,788 வாக்குகளும், திருச்சி மேற்கு தொகுதியில் 1,791 வாக்குகளும்,

ஸ்ரீரங்கம் தொகுதியில் 2,570 வாக்குகளும், திருவெறும்பூர் தொகுதியில் 2,432 வாக்குகளும், கந்தர்வகோட்டை தொகுதியில் 3,279 வாக்குகளும், புதுக்கோட்டையில் 2,921 வாக்குகளும், 15 தபால் ஓட்டுகளும் என திருச்சி தொகுதிக்கு உட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளிலும் பரவலாக வாக்குகள் கிடைத்து, மொத்தம் 14 ஆயிரத்து 796 வாக்குகளை பெற்றுள்ளார்.

இதன்மூலம் 35 பேர் போட்டியிட்ட திருச்சி தொகுதியில் அ.ம.மு.க. வேட்பாளர் செந்தில் நாதனுக்கு அடுத்தபடியாக சுயேச்சை வேட்பாளர் செல்வராஜ் 5வது இடத்தில் உள்ளார். இவருக்கு அடுத்தபடியாக நோட்டாவுக்கு 13,849 வாக்குகள் கிடைத்துள்ளது.

# கடந்த ஆண்டு பஸ் பயண அட்டையை கொண்டு மாணவர்கள் பயணிக்கலாம் போக்குவரத்து கழகம் அறிவிப்பு

சென்னை, ஜூன் 8

கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் வருகிற 10ந்தேதி (திங்கட்கிழமை) திறக்கப்பட உள்ளது. அதே போல், அரசு கலைக் கல்லூரிகளும் அதே நாளில் திறக்கப்பட இருக்கிறது. 2024,25ம் கல்வியாண்டில் மாணவமாணவிகளுக்கான கட்டணமில்லா புதிய பஸ் பயண அட்டையை வழங்குவதில் உள்ள கால அளவினை கருத்தில் கொண்டு கடந்த கல்வியாண்டில் (2023 24) வழங்கப்பட்ட பஸ் பயண அட்டை, பள்ளி மாணவமாணவிகள் சீருடை அல்லது பள்ளிகளில் வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையை நடத்துனரிடம் காண்பித்து தங்கள் இருப்பிடத்தில் இருந்து பள்ளி வரையில் பயணிக்கலாம். இதே போல், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அரசு பாலிடெக்னிக் கல்லூரி, ஐ.டி.ஐ. மாணவமாணவிகளும் 202324ம் ஆண்டில் வழங்கப்பட்ட கட்டணமில்லா பஸ் பயண அட்டை அல்லது தங்களுடைய கல்வி நிறுவனத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை பயன்படுத்தி பஸ்களில் கட்டணமின்றி பயணிக்க அனுமதிக்கப்படுவார்கள் என மாநகர போக்குவரத்து கழகம் அறிவித்துள்ளது. மேலும் பள்ளிக்கல்வித் துறையுடன் இணைந்து கட்டணமில்லா பயண அட்டையினை இந்த மாத இறுதிக்குள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

பள்ளிகள் தொடங்கும், முடியும் நேரம் வரை பஸ்கள் சரியாக இயங்குவதை கண்காணித்திட அலுவலர்கள் குழுக்கள்அமைக்கப்பட்டுள்ளன.உரியபஸ்நிறுத்தத்தில் பஸ்களை நிறுத்தி மாணவமாணவிகளை பாதுகாப்பாக ஏற்றி, இறக்கி செல்ல மாநகர போக்குவரத்து கழக டிரைவர் மற்றும் நடத்துனர்களுக்கு தக்க அறிவுரை வழங்கப்பட்டு இருப்பதாகவும் மாநகர போக்குவரத்து கழகம் தெரிவித்திருக்கிறது

# கடன் கேட்டு வந்தபோது மலர்ந்த காதல்... வீட்டை விட்டு வெளியேறி காதலனை கரம் பிடித்த பட்டதாரி பெண்



சென்னை, ஜூன் 8 விருதுநகர் மக்களவை தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் மாணிக்கம் தாகூர், தே.மு.தி.க. வேட்பாளர் விஜயபிரபாகரன், பா.ஜ.க. வேட்பாளர் ராதிகா சரத்குமார் நாம் தமிழர் வேட்பாளர் கவுசிக் உள்ளிட்டோர் போட்டியிட்டனர். இதில் மாணிக்கம் தாகூர் 4,379 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இதனிடையே தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர்களிடம் பேசுகையில், "விருதுநகரில் விஜயபிரபாகரன் தோற்கவில்லை, தோற்கடிக்கப்பட்டுள்ளார். வீழ்ச்சியடையவில்லை, வீழ்த்தப்பட்டுள்ளார். தோல்வியை முழு மனதாக ஏற்கிறோம். மக்கள் தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறோம்" என்று தெரிவித்தார்.

இந்த நிலையில் விருதுநகரில் மறு வாக்கு எண்ணிக்கை நடத்தக் கோரி டெல்லியில் உள்ள இந்திய தலைமை தேர்தல் ஆணையத்தில் தே.மு.தி.க.தரப்பில் மனு அளிக்கப்பட்டுள்ளது. தே.மு.தி.க.வின் டெல்லி மாநில தலைவர் நாகராஜன் புகார் மனுவை அளித்துள்ளார். அதில், விருதுநகர் தொகுதியில் வாக்கு எண்ணிக்கையில் முறைகேடு நடந்திருப்பதாகவும், மறுவாக்கு எண்ணிக்கை நடத்த உத்தரவிட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதே போல் சென்னை தலைமை செயலகத்தில் உள்ள தமிழ்நாடு தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகுவின் அலுவலகத்தில், தே.மு.தி.க. வழக்கறிஞர் ஜனார்த்தனன் மனு அளித்தார். அந்த மனுவில் தேர்தல் நடத்தை விதி 63ன் படி விருதுநகர் தேர்தல் முடிவை நிறுத்தி வைத்து முறைகேடுகளை விசாரிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ள அவர், மறுவாக்கு எண்ணிக்கை நடத்த உத்தரவிட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

# நம்பர் பிளேட்களில் ஸ்டிக்கர் ஒட்டினால் வாகனங்களை பறிமுதல் செய்ய வேண்டும்: சென்னை ஐகோர்ட்டு

சென்னை, ஜூன் 8 சென்னை நகரில் தனியார் வாகனங்களில் காவல்துறை, அரசு, ஊடகம், வழக்கறிஞர் என ஸ்டிக்கர் ஒட்டக் கூடாது எனவும், மீறினால் அபராதம் விதிக்கப்படும் எனவும் சென்னை போக்குவரத்து காவல் துறை உத்தரவு பிறப்பித்தது.

இந்த உத்தரவை தமிழகம் முழுவதும் அமல்படுத்த உத்தரவிடக் கோரி சென்னையைச் சேர்ந்த தேவதாஸ்காந்தி வில்சன் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

அந்த மனுவில், கார் கண்ணாடிகளில் கருப்பு ஸ்டிக்கர் ஒட்டக் கூடாது என்ற சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு முறையாக அமல்படுத்தப்படவில்லை எனவும், வாகனங்களின் முன்பக்கம், பின்பக்க கண்ணாடிகளில் மத சின்னங்கள், அரசியல் கட்சி தலைவர்கள் படங்கள், நடிகர்கள் படங்களை ஒட்டத் தடை விதிக்க வேண்டும் எனவும், பேருந்துகளின் பின்புறமும், பக்கவாட்டு பகுதிகளிலும் விளம்பரங்கள் செய்வதை தடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த பொறுப்பு தலைமை நீதிபதி மகாதேவன் மற்றும் நீதிபதி முகமது சபிக் அமர்வு, போக்குவரத்து விதிகளை மீறும் அரசியல்வாதிகளின் வாகனங்கள் உள்ளிட்ட அனைத்து வாகனங்களையும் உடனடியாக பறிமுதல் செய்ய வேண்டும் என மாநில அரசுக்கு உத்தரவிட்டது.

மேலும், ஸ்டிக்கர்கள் ஒட்ட தடை விதித்தும், கண்ணாடிகளில் கருப்பு கண்ணாடி ஒட்டியுள்ள வாகனங்களை சோதனை செய்ய வேண்டும் என அறிவுறுத்திய நீதிபதிகள், இந்த வழக்கு தொடர்பாக ஜூன் 20ம் தேதி விரிவான உத்தரவு பிறப்பிக்கப்படும் எனக் கூறி, விசாரணையை தள்ளிவைத்தனர். அன்றைய தினம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கோர்ட்டில் ஆஜராகியிருக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டனர்.

# நெல்லை மாவட்டத்திற்கு 21ந்தேதி உள்ளூர் விடுமுறை




நெல்லை, ஜூன் 8 தமிழகத்தில் உள்ள பழமையான மற்றும் பிரசித்தி பெற்ற சிவாலயங்களில் நெல்லை டவுன் நெல்லையப்பர் கோவிலும் ஒன்றாகும். இக்கோவிலில் நடைபெறும் விழாக்களில் ஆனித் தேரோட்ட திருவிழா மிகவும் சிறப்பு வாய்ந்தது. கோவிலில் இந்த ஆண்டு ஆனித் திருவிழா தேரோட்டம் வருகிற 21ந்தேதி நடைபெற உள்ளது.

இதனை முன்னிட்டு நெல்லை மாவட்டத்திற்கு வருகிற 21ந்தேதி உள்ளூர் விடுமுறை அளித்து ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார். இந்த விடுமுறையை ஈடு செய்யும் வகையில் வருகிற 29ந்தேதி வேலை நாளாக செயல்படும் என்றும் ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

# இன்ஸ்டாகிராமில் பல பெண்களிடம் பேச்சு... கணவரை கண்டித்த மனைவி... அடுத்து நடந்த விபரீதம்

சேலம், ஜூன் 8 சேலம் மாவட்டம் அய்யம் பெருமாம்பட்டி பகுதியை சேர்ந்தவர் சந்துரு (வயது 25). வெல்டிங் தொழிலாளி. இவருக்கு புதுச்சேரியை சேர்ந்த ஜீவா என்ற பெண்ணுடன் முகநூல் மூலம் பழக்கம் ஏற்பட்டது. இதையடுத்து அவர்கள் அடிக்கடி பேசி வந்தனர். இது நாளடைவில் காதலாக மாறியது. இதனை தொடர்ந்து காதல் ஜோடி கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் செய்து கொண்டனர். இவர்களுக்கு 2½ வயதில் ஒரு பெண் குழந்தை உள்ளது.

இந்த நிலையில் சந்துரு தொடர்ந்து இன்ஸ்டாகிராம் மூலம் பல பெண்களிடம் பேசி வந்ததாக கூறப்படுகிறது. இதை ஜீவா கண்டித்தார். இதனால் இருவருக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது.

இதற்கிடையே கடந்த 4ந் தேதி கணவன், மனைவி இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் விரக்தி அடைந்த ஜீவா வீட்டில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து தகவல் அறிந்த சூரமங்கலம் போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று ஜீவாவின் உடலை மீட்டு சேலம் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் திருமணமாகி 3 ஆண்டுகளில் இளம்பெண் தற்கொலை செய்து கொண்டதால் இதுதொடர்பாக சேலம் உதவி கலெக்டர் அம்பாயிரநாதன் விசாரணை நடத்தி வருகிறார். இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# அகழ்வாராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்ட முருகன் கோவிலில் பராமரிப்பு பணிகள்



மாமல்லபுரம், ஜூன் 8 செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் அடுத்த சாலவன்குப்பத்தில் கடந்த 2005ம் ஆண்டு தொல்லியல் துறையின் ஆராய்ச்சியாளர்கள் அகழாய்வு செய்த போது, பூமிக்கடியில் புதைந்திருந்த சங்க கால முருகன் கோவிலை கண்டுபிடித்தனர். இந்த கோவில் மிகவும் பழமையானது என்று அகழ்வாராய்ச்சி மேற்கொண்ட இந்திய தொல்லியல் துறையினர் தெரிவித்திருந்தனர்.

பெரும்பாலான இந்து கோவில்களை போல் அல்லாமல் இந்த கோவில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது இந்த கோவிலின் சிறப்பாகும். இந்த கோவிலின் முகப்பு வாயிலில் கருங்கல்லில் வடிக்கப்பட்ட வேல் இருப்பதையும் காணலாம்.

தொல்லியல் துறை அகழ்வாராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்ட இந்த முருகன் கோவிலை சுற்றி கம்பி வேலி அமைத்து பாதுகாத்து வந்தனர். சுற்றுலா பயணிகள் போர்வையில் சமூக விரோதிகள் உள்ளே புகுந்து மது குடித்தும் அசுத்தம் செய்தும் நாசம் செய்வார்கள் என்பதால் இங்கு சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி அளிக்கவில்லை.

19 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது இந்த முருகன் கோவிலின் பராமரிப்பு பணி தொடங்கப்பட்டுள்ளது. மாமல்லபுரம் தொல்லியல் துறை அதிகாரி ஸ்ரீதர் தலைமையில், இந்திய தொல்லியல் துறையின் வேதியியல் பிரிவினர் பழங்கால முறையில் கடுக்காய், வெல்லம் கலந்த சுண்ணாம்புக் கலவை மூலம் பூசி பராமரிப்பு பணிகளை தொடங்கி உள்ளனர்.

கோவில் கட்டுமானத்தில் உள்ள செங்கற்களில் உள்ள தூசிகள் அகற்றப்பட்டு, பூச்சிகள், வண்டுகள் அரிக்காத சுண்ணாம்பு கலவை பூசப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டு உள்ளது. 15 நாட்களுக்கு மேல் இந்த பணிகள் நடைபெறும் என்று தொல்லியல் துறை தெரிவித்துள்ளது.

# கார் மீது லாரி மோதி விபத்து: 2 பேர் பலி



சென்னை, ஜூன் 8 சென்னை போரூர் வளசரவாக்கம் பாலமுருகன் நகர் பகுதியை சேர்ந்தவர் வினோத்(33). இவர் தனது குடும்பத்தினர் 7 பேருடன் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோவிலில் தரிசனம் செய்துவிட்டு சென்னைக்கு திரும்பிக்கொண்டிருந்தனர். அப்போது திடீரென மழை பெய்ய தொடங்கியது.

இந்நிலையில், திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலையில் மதுராந்தகம் அடுத்த படாளம் கூட்ரோடு பகுதியில் கார் வந்து கொண்டிருந்தது. அப்போது பின்னால் லோடு ஏற்றி வந்த லாரி கார் மீது மின்னல் வேகத்தில் மோதியது. இந்த விபத்தில் காரில் இருந்த பார்வதி மற்றும் சிறுவன் சச்சின் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், படுகாயங்களுடன் 5 பேர் உயிருக்கு போராடிக்கொண்டிருந்தனர்.

இந்த விபத்து தொடர்பாக போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனே சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார் படுகாயமடைந்த 5 பேரை மீட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். மேலும் 2 பேரின் உடல்களை பிரேத பரிசோதனைக்காக அதே மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. விபத்து குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# கடனை வசூலிக்க நிதி நிறுவனம் நெருக்கடி: விஷம் குடித்து ஊழியர் தற்கொலை



விழுப்புரம், ஜூன் 8 விழுப்புரம் மாவட்டம் மயிலம் அருகே உள்ள வீடூர் புது காலனியை சேர்ந்தவர் அருண்குமார் (வயது 25). இவர், மதுலிகா (19) என்பவரை திருமணம் செய்து கொண்டார். இந்த தம்பதிக்கு 1 வயதில் பெண் குழந்தை உள்ளது. விழுப்புரத்தில் உள்ள ஒரு தனியார் நிதி நிறுவனத்தில் அருண்குமார் ஊழியராக பணிபுரிந்து வந்தார்.

நிதி நிறுவனத்தில் கடன் வாங்கியவர்களிடம் இருந்து பணம் வசூலிக்கும் பணி அருண்குமாருக்கு ஒதுக்கப்பட்டது. கடந்த 1ந்தேதி அருண்குமாரிடம், கடன் வாங்கியவர்களிடம் இருந்து பணத்தை வசூலித்து கட்ட வேண்டும் என்று நிதி நிறுவனத்தின் மேலாளர் நெருக்கடி கொடுத்ததாக கூறப்படுகிறது. இதில் மனஉளைச்சலில் இருந்த அருண்குமார், அன்று மாலையிலேயே பேரணி என்ற இடத்தில் விஷத்தை குடித்து மயங்கி கிடந்தார். இதை பார்த்த அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு சிகிச்சைக்காக விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி அருண்குமார் பரிதாபமாக உயிரிழந்தார்.

இதுகுறித்து மதுலிகா, விக்கிரவாண்டி போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதில் எனது கணவர் சாவுக்கு காரணமான நிதி நிறுவன மேலாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியிருந்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# தி.மு.க. கவுன்சிலரின் மாமியார் குளத்தில் மூழ்கடித்து கொலை



அறந்தாங்கி, ஜூன் 8 புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகே அரசர்குளம் அக்ரஹாரம் பகுதியை சேர்ந்தவர் சாத்தையா. இவரது மனைவி சத்தியம்மாள் (வயது 75). இவர்களது மகன் செல்வம். இவரது மனைவி ராஜேஸ்வரி. இவர் அறந்தாங்கி தி.மு.க. கிழக்கு ஒன்றிய துணை செயலாளராகவும், ஒன்றிய கவுன்சிலராகவும் உள்ளார்.

இந்நிலையில் சத்தியம்மாள் நேற்று முன்தினம் அப்பகுதியில் உள்ள கோட்டை குளத்துக்கு குளிக்க சென்றார். நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பவில்லை. இதனால் சந்தேகமடைந்த அவரது குடும்பத்தினர் அவரை தேடி குளத்திற்கு சென்றனர்.

அப்போது சத்தியம்மாள், குளத்தின் கரையோரம் தண்ணீரில் பிணமாகமிதந்தபடிகிடந்தார். இதைப்பார்த்து அதிர்ச்சியடைந்த அவர்கள் குளத்தில் இருந்து சத்தியம்மாளின் உடலை மீட்டு வெளியே கொண்டு வந்தனர். பின்னர் இதுகுறித்து நாகுடி போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். அதன்பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

இதில், சத்தியம்மாளை தண்ணீரில் மூழ்கடித்து கொன்று விட்டு அவரது கழுத்தில் கிடந்த தங்க கம்மல் மற்றும் தங்க சங்கிலி உள்பட 8 பவுன் நகைகளை மர்மநபர் கொள்ளையடித்து சென்றது தெரியவந்தது. இதற்கிடையே போலீசார் சத்தியம்மாளின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

கொலையாளியை கைது செய்ய புதுக்கோட்டை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு வந்திதா பாண்டே உத்தரவின் பேரில் தனிப்படை அமைக்கப்பட்டது. இந்த தனிப்படை போலீசார், அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்து விசாரணை நடத்தினர். விசாரணையில், அரசர்குளம் பேட்டை பகுதியை சேர்ந்த இப்ராஹிம்ஷா மகன் முகாஸ்ரின் (25) என்பவர் மூதாட்டியை தண்ணீரில் மூழ்கடித்து கொன்றது தெரியவந்தது.

இதையடுத்து போலீசார் வழக்குப்பதிவு செய்து, அவரை கைது செய்தனர். மேலும் அவர் வீட்டில் எலி வலைக்குள் மறைத்து வைத்திருந்த 8 பவுன் நகைகளை மீட்டனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.


# தாயை பிரிந்து தவித்து வரும் குட்டி யானையை முகாமிற்கு அனுப்ப முடிவு?

கோவை, ஜூன் 8 கோவை மருதமலை வனப்பகுதியில் பெண் யானை உடல் நலம் பாதிப்படைந்த நிலையில் வனப்பகுதியில் படுத்து கிடந்தது. அதன் அருகே 4 மாத குட்டி யானையும் நின்றது. வனத்துறையினர் பொக்லைன் மூலம் பெண் யானையை தூக்கி நிறுத்தி சிகிச்சை அளித்தனர். உடல்நலம் தேறிய பின்னர் அந்த யானை வனப்பகுதிக்குள் சென்றது. இதற்கிடையே, யானைக்கு சிகிச்சை அளிக்கும்போது தாய் யானையிடம் இருந்து குட்டியானை பிரிந்து மற்ற யானை கூட்டத்துடன் சுற்றி திரிந்தது.

இந்நிலையில் குட்டி யானை நேற்று முன்தினம் கோவை விராலியூர் அருகே உள்ள பச்சான் வயல் என்ற இடத்தில் தனியாக தவித்தபடி நின்றது. இதுபற்றிய தகவல் கிடைத்ததும், வனத்துறையினர் குட்டி யானையை மீட்டு ஜீப்பில் ஏற்றி கோவை மருதமலை வனப்பகுதி அருகே உள்ள யானை மடுவு பகுதிக்கு கொண்டு வந்தனர்.

பின்னர் அந்த குட்டி யானைக்கு புட்டி பால் கொடுக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து குட்டியானையை தாயுடன் சேர்ப்பதற்காக தாய் யானை நடமாடும் வனப்பகுதியில் கொண்டு போய் விட்டனர். ஆனால் தாய் யானையும் குட்டி யானையும் இன்னும் சேரவில்லை. தாயைப் பிரிந்து தனியாக வந்த குட்டி யானையை தாய் யானையுடன் சேர்க்க 3வது நாளாக வனத்துறையினர் முயன்று வரும் நிலையில், இன்று மாலைக்குள் வெற்றி அடையாத பட்சத்தில், ஆனைமலை புலிகள் காப்பகத்தில் உள்ள யானைகள் முகாமிற்கு குட்டி யானையை அனுப்ப வனத்துறையினர் முடிவு செய்துள்ளனர்.

# பள்ளி மாணவியை பாலியல் வன்கொடுமை செய்த வாலிபருக்கு 20 ஆண்டு சிறை



திருப்பூர், ஜூன் 8 திருப்பூர் அருகே திருமணம் செய்வதாக கூறி பள்ளி மாணவியை பாலியல் வன்கொடுமை செய்த வாலிபருக்கு 20 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனை விதித்து திருப்பூர் மாவட்ட மகளிர் நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டது.

தேனி மாவட்டம் உத்தமபாளையத்தை சேர்ந்தவர் மணிகண்டன் (வயது 31). இவர் திருப்பூரை அடுத்த பெருமாநல்லூர் பகுதியில் தங்கியிருந்து பனியன் நிறுவனத்தில் டெய்லராக வேலை செய்து வந்தார்.

அப்போது 17 வயதுடைய பிளஸ்2 மாணவியிடம் பழக்கம் ஏற்பட்டுள்ளது. கடந்த 2021ம் ஆண்டு அந்தமாணவியைதேனிக்கு அழைத்துச்சென்று பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். இது குறித்து மாணவியின் பெற்றோர் அளித்த புகாரின் பேரில் பெருமாநல்லூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். அதன்பிறகு மாணவியை மீட்டு போக்சோ சட்டத்தின் கீழ் மணிகண்டனை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இதுதொடர்பான வழக்கு விசாரணை திருப்பூர் மாவட்ட மகளிர் நீதிமன்றத்தில் நடந்து வந்தது. நேற்று இந்த வழக்கில் தீர்ப்பு கூறப்பட்டது. மாணவியை பாலியல் வன்கொடுமை செய்த மணிகண்டனுக்கு 20 ஆண்டு கடுங்காவல் சிறைதண்டனை, ரூ.5 ஆயிரம் அபராதம், திருமணம் செய்வதாக ஆசைவார்த்தை கூறி கடத்திச்சென்ற குற்றத்துக்கு 3 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனை, ரூ.2 ஆயிரம் அபராதம் விதித்து இதை ஏக காலத்தில் மணிகண்டன் அனுபவிக்க வேண்டும் என்று நீதிபதி ஸ்ரீதர் உத்தரவிட்டார். மேலும் பாதிக்கப்பட்ட மாணவிக்கு ரூ.50 ஆயிரம் இழப்பீடு வழங்கவும் பரிந்துரை செய்தார்.

# ஹைபர் லிங்க் கதையில் நடிக்கும் விதார்த், ஜனனி



படத்தின் கதையை, ஹைபர் லிங்க் நான் லீனியர் பாணியில் திரைக்கதை அமைத்து இருப்பதாக டைரக்டர் கிருஷ்ணா குமார் கூறினார்.

விதார்த் மற்றும் ஜனனி இணைந்து நடிக்கும் புதிய படம் பூஜையுடன் துவங்கியுள்ளது. தமிழ் சினிமாவில் பல வெற்றி பெற்ற படங்களுக்கு போஸ்ட் புரொடக்சன் பணிகளை செய்து வந்த குவியம் ஸ்டுடியோஸ் நிறுவனம், தற்போது குவியம் பிலிம்ஸ் என்ற பெயரில் படதயாரிப்பில் இறங்கியுள்ளது.

அந்த வகையில் குவியம் பிலிம்ஸ் நிறுவனம் சார்பில் லால்குடி எம்.ஹரிஹரன் தயாரிக்கும் முதல் படத்தில் விதார்த் மற்றும் ஜனனி நடிக்கின்றனர். இந்த படத்தில் எம்.எஸ்.பாஸ்கர், சரவணன், பப்லு பிரித்விராஜ், நமீதா கிருஷ்ணமூர்த்தி, ஷாரிக் ஹாசன், விகாஸ், மகா ஆகியோர் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடிக்கின்றனர்.

கார்த்திக் நேத்தா பாடல் வரிகள் எழுத லால்குடி எம்.ஹரிஹரன் இசையமைக்கிறார். கோவிந்த் நல்லதம்பி படத்தொகுப்பு செய்யும் இப்படத்திற்கு பிரபு ராகவ் ஒளிப்பதிவு செய்கிறார். கதை, திரைக்கதை எழுதி கிருஷ்ணா குமார் இயக்குகிறார்.

இப்படம் குறித்து கிருஷ்ணா குமார் கூறும்போது, நாம் செய்த தவறு எந்த காலத்திலும் நம்மை விடாது. எதாவது ஒரு வழியில் நம்மை வந்து சேரும் என்ற கதையை, ஹைபர் லிங்க் நான் லீனியர் பாணியில் திரைக்கதை அமைத்து இருக்கிறேன். இதுவரை யாரும் சொல்லாத வகையில் வித்தியாசமாக ஒன்றை முயற்சி செய்ய இருக்கிறோம்.

சஸ்பென்ஸ் திரில்லர், டிராமா, காதல் ஆகிய மூன்று கதைகளாக திரைக்கதை நகர்ந்து ஒரே புள்ளியில் கதை முடியும். ஜூலை மாதம் படப்பிடிப்பு தொடங்கி 35 நாட்கள் தொடர்ந்து நடத்த இருக்கிறோம் என்றார்.


இப்படத்தின் பூஜை நேற்று சென்னையில் போடப்பட்டது. இதில் படக்குழுவினர் பலரும் கலந்து கொண்டனர். விரைவில் படத்தின் தலைப்பு மற்றும் பர்ஸ்ட் லுக் போஸ்டரை பட குழுவினர் வெளியிட இருக்கிறார்கள்.

# ராகவா லாரன்ஸ் இயக்கத்தில் காஞ்சனா 4 வெளியான அப்டேட்




ராகவா லாரன்ஸ் நடித்து இயக்கிய 'காஞ்சனா' திரைப்படம் கடந்த 2011ம் ஆண்டு வெளியாகி ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றது. இதன் தொடர்ச்சியாக 2015ல் 'காஞ்சனா 2' மற்றும் 2019ல் 'காஞ்சனா 3' என அடுத்தடுத்த பாகங்களை ராகவா லாரன்ஸ் இயக்கினார். ஹாரர் காமெடி ஜானரில் உருவான இந்த படங்கள் பேமிலி ஆடியன்சை கவர்ந்தது. தமிழ் சினிமாவில் பேய்ப் படங்களுக்கான மவுசு குறையவில்லை என்பதை கடந்த மாதம் வெளியான 'அரண்மனை 4' திரைப்படத்தின் வெற்றி உறுதி செய்துள்ளது. சுந்தர்.சி நடித்து இயக்கியிருந்த இந்த படம் ரூ.100 கோடியை தாண்டி வசூல் செய்தது. இந்த நிலையில் 'காஞ்சனா' சீரிஸ் திரைப்படங்களின் வரிசையில் 'காஞ்சனா 4' படத்தை இயக்குவதில் ராகவா லாரன்ஸ் கவனம் செலுத்தி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும் இதற்கான ஸ்கிரிப்ட் வேலைகளில் அவர் ஈடுபட்டுள்ளதாகவும், செப்டம்பர் மாதம் 'காஞ்சனா 4' படத்தின் படப்பிடிப்பு தொடங்கும் என்றும் தகவல் வெளியாகி உள்ளது. இதனிடையே ராகவா லாரன்ஸ் 'பென்ஸ்', 'ஹன்டர்' ஆகிய படங்களில் நடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# நயன்தாராவின் குழந்தைகளை தேடி வந்த புஜ்ஜி பரிசுப்பெட்டி






நாக் அஸ்வின் இயக்கத்தில் பிரபாஸ் ஹீரோவாக நடிக்கும் படம், 'கல்கி 2898 ஏடி'. இதில் அமிதாப்பச்சன், கமல்ஹாசன், தீபிகா படுகோன், திஷா பதானி, அன்னா பென் உட்பட பலர் நடிக்கின்றனர். சந்தோஷ் நாராயணன் இசை அமைக்கிறார்.

வைஜெயந்தி மூவிஸ் தயாரித்துள்ள இந்தப் படம், பான் இந்தியா முறையில் உருவாகிறது. அறிவியல் புனைவு திரைப்படமான இதில் பிரபாஸின் அறிமுக வீடியோ சில மாதங்களுக்கு முன் வெளியாகி வரவேற்பை பெற்றது. அமிதாப் பச்சனின் தோற்றமும் அண்மையில் வெளியானது. அதேபோல, கடந்த சில தினங்களுக்கு முன்பு கல்கி படத்தின் ஐந்தாவது சூப்பர் ஸ்டார் பைரவாவின் சிறந்த நண்பரும் வாகனமுமான "புஜ்ஜி" அறிமுகம் ஆனது.

இந்நிலையில், 'கல்கி 2898 ஏ.டி' படத்தின் டிரெய்லர் வரும் 10 ம் தேதி வெளியாக உள்ளது. கல்கி திரைப்படம் வரும் ஜூன் 27ம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது. இந்நிலையில், படத்தின் புரமோசனையும் படக்குழு தீவிரப்படுத்தி உள்ளது. அதன்படி, காமிக் புத்தகம், மற்றும் பொம்மைகள் அடங்கிய புஜ்ஜி பரிசுப்பெட்டி திரையுலகின் முக்கிய நட்சத்திரங்களின் வீடுகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. அதன்படி, மகேஷ்பாபு மகள் சித்தாரா, ராம்சரணின் மகள் கிலின் காரா ஆகியோருக்கு பரிசுப்பெட்டி அனுப்பப்பட்டது. தற்போது நயன்தாராவின் உயிர் மற்றும் உலக் இருவருக்கும் புஜ்ஜி கார் பரிசுப்பெட்டியை கல்கி படக்குழு அனுப்பி வைத்துள்ளது. இதற்கு நயன்தாராவும் நன்றி தெரிவித்துள்ளார்.

# ரஜினிகாந்தை சந்தித்து வரலட்சுமியின் திருமண அழைப்பிதழை வழங்கிய சரத்குமார்



நடிகர் ரஜினிகாந்தை சந்தித்து தனது மகள் வரலட்சுமி சரத்குமாரின் திருமண அழைப்பிதழை நடிகர் சரத்குமார், ராதிகா தம்பதியர் வழங்கினர்.

இயக்குனர் விக்னேஷ் சிவன் இயக்கிய 'போடா போடி' படத்தில் ஹீரோயினாக அறிமுகமானவர் வரலட்சுமி சரத்குமார். இயக்குனர் பாலா இயக்கிய 'தாரை தப்பட்டை' படம் வரலட்சுமிக்கு சிறந்த கம்பேக்காக அமைந்தது. இப்படத்தை தொடர்ந்து விக்ரம் வேதா, சர்க்கார், போன்ற பல படங்களில் குணசித்ர வேடத்திலும், வில்லியாகவும் நடித்து மிரட்டி இருந்தார்.

நடிகர் சரத்குமாரின் மகளும், நடிகையுமான வரலட்சுமி சரத்குமாருக்கும் மும்பையைச் சேர்ந்த தொழிலதிபர் நிகோலய் சச்தேவுக்கும் இரு வீட்டார் பெற்றோர்கள், நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் முன்னிலையில் கடந்த மார்ச் மாதம் நிச்சயதார்த்தம் நடைபெற்றது.

வரலட்சுமியின் திருமணம் அடுத்த மாதம் (ஜூலை 2ம் தேதி) தாய்லாந்தில் நடைபெற உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதனை தொடர்ந்து திருமண ஏற்பாடுகள் நடைபெற்று வரும் நிலையில் இன்று சரத்குமார் குடும்பத்தினர் நடிகர் ரஜினிகாந்தை அவரது இல்லத்தில் சந்தித்து வரலட்சுமி திருமண அழைப்பிதழை கொடுத்து திருமணத்திற்கு அழைப்பு விடுத்தனர்.

இதில் சரத்குமார், ராதிகா சரத்குமார், வரலட்சுமி உள்ளிட்டோர் உடன் இருந்தனர். இதனை வரலட்சுமி சரத்குமார் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்து ரஜினிகாந்த் மற்றும் லதா இருவரையும் எனது திருமணத்திற்கு அழைப்பு விடுத்துள்ளோம் என்று பதிவிட்டுள்ளார்.

# துல்கர் சல்மானுக்கு ஜோடியாக நடிக்க கூப்பிட்டால் சம்பளமே வேண்டாம் நடிகை பிரக்யா நாக்ரா



அரியானாவில் பிறந்து வளர்ந்த பிரக்யாவுக்கு மாடலிங் மற்றும் சினிமாவில் நடிக்கும் ஆசை ஏற்பட்டது. 100க்கும் மேற்பட்ட பல்வேறு விதமான விளம்பரங்களில் நடித்துள்ளார். பிரக்யாவின் அப்பா ராணுவத்தில் இருந்ததால் வேலை காரணமாக அடிக்கடி சென்னை வந்தார். அவரோடு அடிக்கடி சென்னை வந்த பிரக்யாவுக்கு சென்னை பரிச்சயம் ஏற்பட்டது.

சினிமாவில் எதிர்பார்த்த வாய்ப்புகள் கிடைக்கவில்லை என்பதால் குறும்படங்களில் நடிக்க துவங்கினார். அப்படி இவர் நடித்த லாக்டவுன் காதல் எனும் குறும்படம் யூடியூப்பில் வெளியானது. அஞ்சலி எனும் சீரியலிலும் இவர் நடித்துள்ளார்.

'வரலாறு முக்கியம்' படத்தின் மூலமாக தமிழ் சினிமாவுக்குள் நுழைந்தவர், பிரக்யா நாக்ரா. அடுத்து 'என்.4' படத்திலும் நடித்து அசத்தினார். மலையாளத்தில் இவர் நடித்த 'நதிக்காலில் சுந்தரி யமுனா' படம் இவரை இன்னும் பிரபலமாக்கியது. இன்ஸ்டாகிராமில் மிகவும் ஆக்டிவ் ஆக உள்ள பிரக்யாவுக்கு ரசிகர்கள் ஏராளம்.

ஜெய் மற்றும் நடிகை பிரக்யா நாக்ரா திருமணம் செய்து கொண்டதை உணர்த்தும் புகைப்படம் ஒன்று சமூக வலைதளங்களில் வைரலானது. 'பேபி & பேபி' படத்தில் ஜெய்யின் ஜோடியாக இவர் நடித்துள்ளார்.

துல்கர் சல்மானுக்கு ஜோடியாக நடிக்க கூப்பிட்டால் சம்பளமே வேண்டாம் என்றும் கவர்ச்சியில் பெண்களை அழகாக காட்டுவதில் தவறே கிடையாது என்றும் நடிகை பிரக்யா நாக்ரா கூறியுள்ளார்.

# டி20 உலகக்கோப்பை: உகாண்டா சுழற்பந்து வீச்சாளர் பிராங்க் புதிய சாதனை



டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் இந்திய நேரப்படி நேற்று அதிகாலை கயானாவில் நடந்த 9வது லீக் ஆட்டத்தில் பப்புவா நியூ கினி உகாண்டா (சி பிரிவு) அணிகள் மோதின. 'டாஸ்' ஜெயித்த உகாண்டா பீல்டிங்கை தேர்வு செய்தது. இதையடுத்து முதலில் பேட் செய்த பப்புவா நியூ கினி அணி, உகாண்டா வீரர்களின் அபார பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 19.1 ஓவர்களில் 77 ரன்னில் சுருண்டது. ஹிரி ஹிரி (15 ரன்), லியா சியாகா, கிப்லின் டோரிகா (தலா 12 ரன்) தவிர மற்றவர்கள் ஒற்றை இலக்கத்தை தாண்டவில்லை. உகாண்டா தரப்பில் 43 வயது சுழற்பந்து வீச்சாளர் பிராங்க் நுபுகா 4 ஓவர்கள் வீசி 2 மெய்டனுடன் 4 ரன் மட்டுமே விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுகள் கைப்பற்றினார். இதன் மூலம் உலகக் கோப்பை வரலாற்றில் ஒரு ஆட்டத்தில் 4 ஓவர்கள் பந்து வீசி குறைவாக ரன் கொடுத்த வீரர் என்ற சாதனையை படைத்தார். இதற்கு முன்பு நடப்பு தொடரில் இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் தென்ஆப்பிரிக்க பவுலர் நோர்டியா 7 ரன் விட்டுக்கொடுத்து 4 விக்கெட் சாய்த்ததே இந்த வகையில் சாதனையாக இருந்தது.

பின்னர் 78 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய உகாண்டாவும் எளிதில் இலக்கை எட்டிப்பிடித்துவிடவில்லை. 26 ரன்னுக்குள் 5 விக்கெட்டுகளை (6.3 ஓவரில்) இழந்து தள்ளாடியது. இதற்கு மத்தியில் 4வது வீரராக களம் கண்ட ரியாத் அலி ஷா (33 ரன், 56 பந்து, ஒரு பவுண்டரி) பொறுப்புடன் ஆடி வெற்றிக்கு வித்திட்டார். உகாண்டா 18.2 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கு 78 ரன்கள் எடுத்து 3 விக்கெட் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றியை ருசித்தது. தனது முதலாவது ஆட்டத்தில் ஆப்கானிஸ்தானிடம் தோற்று இருந்த ஆப்பிரிக்க கண்டத்தை சேர்ந்த அறிமுக அணியான உகாண்டாவுக்கு, உலகக் கோப்பை போட்டிகளில் கிடைத்த முதல் வெற்றி இதுவாகும்.

# கனத்த இதயத்துடன் ஓய்வு பெற்றார் இந்திய கால்பந்து ஜாம்பவான் சுனில் சேத்ரி



23வது உலகக் கோப்பை கால்பந்து போட்டிக்கான ஆசிய மண்டல தகுதி சுற்றுக்கான 2வது ரவுண்டு ஆட்டங்கள் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இந்த தொடரில் இன்று கொல்கத்தாவில் உள்ள சால்ட்லேக் ஸ்டேடியத்தில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்திய அணி, குவைத்தை எதிர்கொண்டது. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் இரு அணிகளும் கோல் அடிக்க தீவிரமாக முயற்சித்தனர். ஆனால் இறுதி வரை 2 அணிகளாலும் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. இதனால் இந்த ஆட்டம் 00 என்ற கணக்கில் சமனில் முடிந்தது.

இந்த நிலையில் இந்த போட்டியுடன் இந்திய அணியின் கேப்டன் சுனில் சேத்ரி சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்தார். இதன்மூலம் சர்வதேச போட்டியில் இருந்து இந்திய கால்பந்து ஜாம்பவான் சுனில் சேத்ரி விடைபெற்றார். போட்டி முடிந்து மைதானத்தை விட்டு செல்லும் போது கண்ணீருடன் வெளியேறினார். இந்திய வீரர்களில் அதிக போட்டிகளில் விளையாடி வீரர் சுனில். 151 போட்டிகளில் விளையாடி 94 கோல்களை பதிவு செய்துள்ளார். மேலும் 50 சர்வதேச கோல்கள் அடித்த முதல் இந்திய வீரர் சுனில் சேத்ரி ஆவார். இந்திய கால்பந்தாட்டத்தை அடுத்தக் கட்டத்துக்கு அழைத்துச் சென்றதும், தன்னுடைய தனிப்பட்ட சாதனையாலும் தேசத்துக்கு பெருமை சேர்த்தவர் சுனில் சேத்ரி என்பது குறிப்பிடத்தக்கது.

# டி20 உலகக்கோப்பை: ஸ்காட்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் நமீபியா பேட்டிங் தேர்வு



9வது டி20 உலகக்கோப்பை தொடரில் இன்று நடைபெறுகின்ற ஆட்டத்தில் ஸ்காட்லாந்து நமீபியா அணிகள் மோதுகின்றன. இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது. அதில் டாஸ் வென்ற நமீபியா அணியின் கேப்டன் ஹெகார்ட் எராஸ்மஸ் பேட்டிங்கை தேர்வு செய்தார். அதன்படி நமீபியா அணி முதலில் பேட்டிங் செய்ய உள்ளது. நமீபியா: நிகோலாஸ் டேவின், ஜேபி கோட்ஸே, ஜான் ப்ரைலின்க், ஜெர்ஹார்ட் எராஸ்மஸ், மாலன் க்ரூகர், ஜேஜே ஸ்மிட், டேவிட் வைஸ், ஜேன் கிரீன், ரூபன் ட்ரம்பெல்மேன், பெர்னார்ட் ஷால்ட்ஸ், டாங்கேனி லுங்காமேனி.

ஸ்காட்லாந்து: ஜார்ஜ் முன்சி, மைக்கேல் ஜோன்ஸ், பிராண்டன் மெக்முல்லன், ரிச்சி பெரிங்டன், மேத்யூ கிராஸ் , மைக்கேல் லீஸ்க், கிறிஸ் க்ரீவ்ஸ், மார்க் வாட், கிறிஸ்டோபர் சோல், பிராட் வீல், பிராட்லி கியூரி.

# பிரெஞ்சு ஓபன் டென்னிஸ்: ஜாஸ்மின் பயோலினி இறுதிப்போட்டிக்கு முன்னேற்றம்



முன்னணி வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ள பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற அரைஇறுதி ஆட்டம் ஒன்றில் இத்தாலியின் ஜாஸ்மின் பயோலினி, ரஷியாவின் மிர்ரா ஆண்ட்ரீவா உடன் மோதினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் சிறப்பாக விளையாடிய ஜாஸ்மின் பயோலினி, 63, 61 என்ற செட் கணக்கில் மிர்ரா ஆண்ட்ரீவாவை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். இறுதிப்போட்டியில் இகா ஸ்வியாடெக் , ஜாஸ்மின் பயோலினி மோத உள்ளனர் .



**நடுவின்றிநன்பொருள்வெஃகிற்குடிபொன்றிக்**
**குற்றமும் ஆங்கே தரும்**

**விளக்கம்:**
நடுவுநிலைமை இல்லாமல் பிறர்க்குரிய நல்லபொருளைஒருவன்கவரவிரும்பினால் அவனுடைய குடியும் கெட்டுக் குற்றமும் அப்போழுதே வந்து சேரும்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.